பதவி உயர்வு பெற்ற முதுகலை ஆசிரியர் பணியிலிருந்து அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியராகப் பணிமாறுதல் பெற்ற ஆசிரியர்களின் விவரங்களை (01.01.2018, 01.01.2019 மற்றும் 01.01.2021 முன்னுரிமைப்பட்டியல் படி) தொகுத்து அனுப்பும் போது கீழ்கண்டவற்றை தவறாது பின்பற்றுமாறு அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது,

1. ஏற்கெனவே அனுப்பப்பட்ட படிவத்தில் எவ்வித கலமும் விடுபடாமல் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
2. அனைத்து கலங்களிலும் தமிழில் மருதம் எழுத்துருவில் மட்டுமே தட்டச்சு செய்யப்படல் வேண்டும்.
3. 01.01.2018, 01.01.2019 மற்றும் 01.01.2021 நிலவரப்படியான முன்னுரிமைப்பட்டியலில் இடம் பெற்று பணிமாறுதல் மூலம் அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியராக நியமனம் செய்யப்பட்டவர்களா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. கலம் 4ல் முன்னுரிமைப்பட்டியலில் உள்ள முன்னுரிமை எண்ணை மட்டுமே குறிப்பிடப்படவேண்டும். (பணிவரன்முறை ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணை பதிவு செய்தல் கூடாது.)
5. மேற்காண் தலைமையாசிரியர்களின் பணிமாறுதல் ஆணை நகல் இணைக்கப்படவேண்டும்.
6. அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியராகப் பணிமாறுதல் ஆணை பெற்று பணியில் சேர்ந்த விவரம் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட பக்க நகல் இணைக்கப்படவேண்டும்.
7. பணிவரன் முறை செய்து ஆணை வழங்கப்பட்டிருப்பின் அதன் நகல் இணைக்கப்படவேண்டும்
8. இத்தலைமையாசிரியர்களில் எவரேனும் அடுத்த நிலை பதவி உயர்வு பெற்றிருந்தாலோ அல்லது ஓய்வு மற்றும் இறப்பு போன்ற நிகழ்வுகள் இருப்பின் அதன் விவரம் குறிப்பிடப்படவேண்டும்.
9. எக்காரணம் கொண்டும் எவரது பெயரும் விடுபடக் கூடாது.
10. எவரது பெயரேனும் விடுபட்டதாக பிற்க்காலங்களில் அறியப்பட்டால் சார்ந்த தலைமையாசிரியருக்கு தயவு காட்டப்பட்டதாகக் கருதி சம்மந்தப்பட்ட பணியாளர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
11. கோரப்பட்டுள்ள விவரங்களை எவ்வித காலதாமதமும் இல்லாமல் உடன் c1.hs.sec.tndse@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| பதவி உயர்வு பெற்ற முதுகலையாசிரியர் பணியிலிருந்து அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியராகப் பதவி உயர்வு பெற்றோர் விவரம் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வ.எ | மாவட்டம் | முன்னுரிமைப் பட்டியல் | முன்னுரிமை எண் | தலைமையாசிரியர் பெயர் மற்றும் பணிபுரியும் பள்ளி | பாடம் (முதுகலையாசிரியர் பணியில்) | தலைமையாசிரியர் பணியில் சேர்ந்த நாள் | தலைமையாசிரியர் ஓய்வு பெறும் நாள் | பதவி உயர்வு பெற்றிருப்பின் அதன் விவரம் | ஓய்வு பெற்றிருப்பின் அதன் விவரம் (வயது முதிர்வு / விருப்ப ஓய்வு / இறப்பு |
| 1 | | | | | | | | | |
| 2 | | | | | | | | | |
| 3 | | | | | | | | | |
| 4 | | | | | | | | | |
| 5 | | | | | | | | | |
| 6 | | | | | | | | | |
| 7 | | | | | | | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | | | | | | | | |
| 9 | | | | | | | | | |
| 10 | | | | | | | | | |
| 11 | | | | | | | | | |
| 12 | | | | | | | | | |
| 13 | | | | | | | | | |
| 14 | | | | | | | | | |
| 15 | | | | | | | | | |
| 16 | | | | | | | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17 | | | | | | | | | |
| 18 | | | | | | | | | |
| 19 | | | | | | | | | |
| 20 | | | | | | | | | |
| 21 | | | | | | | | | |
| 22 | | | | | | | | | |